ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2059/56 - 2018 පෙබරවාරි මස 23 වැනි සිකුරාදා - 2018.02.23
*2059/56 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### காடு பேணற் கட்டளைச் சட்டம்

*1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1979 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2009 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (451 ஆம் அத்தியாயம்) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*கட்டளை*

*1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1979 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2009 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (451 ஆம் அத்தியாயம்) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், கீழ் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் வரையறுக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் உட்பட்ட 532.8034 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட ஹிம்பிலியாகட காடு (கட்டம் II) 2018 ஆம் ஆண்டு மாசி மாதம் 15 ஆந் திகதியிலிருந்து ஹிம்பிலியாகட ஒதுக்குக் காடு (கட்டம் II) என இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்.*

*மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,*
*பத்தரமுல்லை,*
*2018, மாசி 15.*

1A - PG 3929 — 82 (2018/ 02)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *அட்டவணை 1*

*மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் ஹிம்பிலியாகட, வெஹெரகல, கொடஉல்பொத்த, ஈரியகஸ்உல்பொத்த கிராமங்களின் நில அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட எப். ரீ. பீ13, துணை வரைபடம் 190 இல் துண்டு இலக்கம் 2593, 2597 மற்றும் 2600 என அடையாளமிடப்பட்ட ஹிம்பிலியாகட காட்டுக்கு (கட்டம் II) உரியதான படயாய, உதுராகல, பிம்புரன்கல மற்றும் ஹிம்பிலியாகட என்னும் காணிகளின் ஒருங்கிணைந்த மொத்தக் காணிகளான 235.2387 ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக் கொண்ட அரசாங்கக் காணிகளாகும் :-*

*வடக்கு :* *எப். ரீ. பீ13 இன் துண்டு இலக்கம் 2605, 2605 (ஹிம்பிலியாகட தொடக்கம் வெஹெரகல வரை செல்லுகின்ற பிரதேச சபை பாதை), துண்டு இலக்கம் 2605, 2605 (மடுகஹவல ஆறு), துண்டு இலக்கம் 2605, 2605 (மடுகஹவல ஆறு) அத்துடன் துண்டு இலக்கம் 2605 ;*

*கிழக்கு :* *எப். ரீ. பீ13 இன் துண்டு இலக்கம் 2605, 2594 (மடுகஹவல ஆறு), 2605 அத்துடன் 2595 (பம்பரகஹ ஆறு) ;*

*தெற்கு :* *எப். ரீ. பீ13 இன் துண்டு இலக்கம் 2595 (பம்பரகஹ ஆறு), 2605, 2605 (ஈரியகஸ் உல்பொத்த தொடக்கம் வெஹெரகல வரை செல்லுகின்ற பிரதேச சபை பாதை), துண்டு இலக்கம் 2605 அத்துடன் 2601 (ஈரியகஸ்உல்பொத்த ஆறு) ;*

*மேற்கு :* *எப். ரீ. பீ13 இன் துண்டு இலக்கம் 2605, 2599 (ஈரியகஸ் உல்பொத்த தொடக்கம் வெஹெரகல வரை செல்லுகின்ற பிரதேச சபை பாதை), துண்டு இலக்கம் 2605 அத்துடன் 2598 (ஹிம்பிலியாகட தொடக்கம் வெஹெரகல வரை செல்லுகின்ற பிரதேச சபை பாதை) ;*

*(இந்தக் காட்டுக்குள் அமைந்துள்ள துண்டு இலக்கம் 2596 மற்றும் துண்டு இலக்கம் 2599 என்னும் பிரதேச சபைப் பாதைகளாகும்.)*

*விஸ்தீரணம் : 235.2387 ஹெக்டெயார்.*

## *அட்டவணை 2*

*மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் ஹிம்பிலியாகட, வெஹெரகல, கொடஉல்பொத்த, ஈரியகஸ்உல்பொத்த கிராமங்களின் நில அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட எப். ரீ. பீ13, துணை வரைபடம் 190 இல் துண்டு இலக்கம் 2603 என அடையாளமிடப்பட்ட ஹிம்பிலியாகட காட்டுக்கு (கட்டம் II) உரியதான உதுரகல, கிரிமெட்டியாய மற்றும் ஹிம்பிலியாகட என்னும் காணிகளின் ஒருங்கிணைந்த மொத்தக் காணிகளான 297.5647 ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக் கொண்ட அரசாங்கக் காணிகளாகும் :-*

*வடக்கு :* *எப். ரீ. பீ13 இன் துண்டு இலக்கம் 1986 (ஹிம்பிலியாகட காட்டு அளவீட்டுக் கட்டம் I), துண்டு இலக்கம் 2605, 2602 (அலியாவல ஆறு) மற்றும் துண்டு இலக்கம் 2605 ;*

*கிழக்கு :* *எவ். ரீ. பீ10 இன் துண்டு இலக்கம் 1450 (நாமினி ஓயா காடு) ;*

*தெற்கு :* *எவ். ரீ. பீ10 இன் துண்டு இலக்கம் 1019, எப்ரீ. பீ 13 இன் துண்டு இலக்கம் 2605, 2605 (நாமினி ஓயா), 2605, 2604 (ஆறு) அத்துடன் 1986 (ஹிம்பிலியாகட காட்டு அளவீட்டுக் கட்டம் I) ;*

*மேற்கு :* *எப். ரீ. பீ 13 இன் துண்டு இலக்கம் 1986 (ஹிம்பிலியாகட காட்டு அளவீட்டுக் கட்டம் I) ;*

*விஸ்தீரணம் : 297.5647 ஹெக்டெயார்.*

*02-477*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*